**Date: 17.06.2026**

**MCOP. No. 04/2023**

**PW.1:**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு கூடுதல் பிரமாண வாக்குமூலமும் கீழ் கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.**

| | |
|---|---|
| **ம.சா.ஆ.10** | கவிதா க.பெ. வீரகாளை அவர்களின் பிரேத பரிசோதனை கணிணி நகல் |
| **ம.சா-ஆ.11** | கவிதா க.பெ. வீரகாளை அவர்களின் இறப்பு சான்றிதழ் கணிணி நகல் |
| **ம.சா.ஆ.17** | கவிதா க.பெ. வீரகாளை அவர்களின் வாரிசு சான்றிதழ் நகல் |
| **ம.சா.ஆ.13** | எனது கல்லூாரி மாற்றுச்சான்றிதழ் ஜெராக்ஸ் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. |
| **ம.சா.ஆ-14** | அழகப்பா பல்கலைகழத்தில் வழங்கப்பட்ட பட்டய சான்றிதழ் ஜெராக்ஸ் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. |
| **ம.சா.ஆ-15** | வீரக்காளை ஓட்டுநர் உரிமம் ஜெராக்ஸ் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. |

**எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து சம்பந்தமான காவல்நிலையத்தில் நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனதுஅப்பா விபத்திற்கு முன்பு விவசாயம் பார்த்துவந்தார். எனது நீருபண வாக்குமூலத்தில் எனது தகப்பனார் சொந்தமாக டிராவல்ஸ் தொழில் செய்து வந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய தகப்பனால் டிராவல்ஸ்நடத்தியத்தற்கும் மாதம் ரூ.50000/- வருமானம் ஈட்டியதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் அதிக இழப்பீடு பெறுவதற்காக வேண்டி எனது தகப்பனால் டிராவல்ஸ் தொழில் செய்ததாகவும் மாதம் ரூ. 50000/- வருமானம் ஈட்டியதாகவும் பொய்யாக குறிப்பிடுப்பட்டுள்ளது என்றால்

சரியல்ல. விபத்து குறித்த காவல் மாதிரி வரைபடத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்தால் விபத்திற்கான உண்மைத்தன்மை தெரியவரும் என்பதனால் தான் அதனை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது தாயார் மளிகை கடை வைத்திருந்தார். அதற்கான ஆவணங்கள் மற்றும் வருமானம் சம்பந்தமான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உண்மையிலே இந்த விபத்து என்னுடைய தகப்பனார் கவனக்குறைவாலும் அஜாக்கிரதையாலும் நடைபெற்றது என்றும் எதிர் மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமை பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு மிக அதிகம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

(Sd//.S.Mohana Ramya.,)
தலைமைக் குற்றவியல் நடுவர்,
**சிவகங்கை.**